# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2005 - 2017 පෙබරවාරි මස 03 වැනි සිකුරාදා - 2017.02.03

*2005 ஆம் இலக்கம் – 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 370 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *களனி அசோகாராம சிலுமினி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2017, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண நன்னடத்தை சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தில் அலுவலக/கள உத்தியோகத்தர்கள் தொகுதி 2 ஊழியர் வகையின் நன்னடத்தை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

வடமேல் மாகாண நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தில் அலுவலக/கள உத்தியோகத்தர்கள் தொகுதி 2 ஊழியர் வகையின் நன்னடத்தை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கையரான ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் 2017, மே மாதத்தில் குருநாகல் நகரில் ஸ்தாபிக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இப்பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

2. **சம்பளத் திட்டம்.**- 2016 ஆம் ஆண்டு 03/2016 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபத்தின் 1 ஆம் அட்டவணையின் படி இந்தப் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் MN -5-2016 இன்படி ரூ.34605-10X660-11X755-15X930-ரூபா 63460 ஆகும்.

   எனினும் 2020.01.01 வரை உங்களுக்கு சம்பளங்கள் வழங்கப்படுவது அந்தச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் படி அதன் அட்டவணை II இல் சொல்லப்பட்டுள்ளதன் பிரகாரமாகும்.

   (அது 2017.01.01 ஆம் திகதியில் இருந்து அடிப்படைச் சம்பளம் ரூபா 23874 + ஒப்பீட்டுக் கொடுப்பனவு ரூ.6190/- என்றாகும்)

3. (அ) **கல்வித் தகைமைகள்.-**
   - (i) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
   - (ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் (பொது சாதாரண பரீட்சை தவிர்ந்த) சித்தி பெற்றிருத்தல்.
   - (iii) ஆட்சேர்ப்புக்கான சகல தகைமைகளையும் 2017.04.07 ஆம் திகதிக்கு பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.
   - (iv) 2017.04.07 ஆம் திகதிக்கு 21 வயதுக்கு மேற்பட்டும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்.-**
   - (i) இப்பதவி நிரந்தரமானது உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.
   - (ii) இப்பதவிக்கு நியமிக்கப்படுவது 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதுடன், தகுதிகாண் காலத்தினுள் தமது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமாக இருந்து முதலாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்து மற்றும் ஏனைய பணியை நிரந்தரமாக்குவதற்கான தேவைப்படுகளைப் பூர்த்தி செய்திருப்பின் தகுதிகாண் காலத்தின் முடிவில் பதவி நிரந்தரமாக்கப்படும்.
   - (iii) பொது நிர்வாக சுற்று நிருபம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் ஊடக மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி/மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.
   - (iv) இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் செயற்கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப்பிரமாணங்களிற்கும், வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின் வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள் மற்றும் அரசு மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை**:- வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் நடாத்தப்படும் பரீட்சை ஒன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். வெற்றிடமாகவுள்ள பதவிகளில் 70% இந்தப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் பூரணப்படுத்தப்படும். பரீட்சையில் சித்தியடைவதற்காக பாடத்திட்டத்தில் காட்டப்படும் ஒவ்வொரு வினாத் தாளிற்கும் 40% க்கு மேல் புள்ளிகள் பெறவேண்டும். எழுத்துப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை, கட்டமைக்கப்பட்ட நேர் முகப் பரீட்சைக்கு புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **பரீட்சை முறை**.- பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது.

6.1 **எழுத்து மூல பரீட்சைக்கான விபரங்கள் பின்வருமாறு**:

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத்தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. விடய அறிவு | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொது உளச் சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40 |

6.2 **பாடத் திட்டம்**.-

1. விடய அறிவு.-

(i) இலங்கையின் சிறுவர்கள் தொடர்பான சமூகப் பிரச்சினைகள்
(ii) பிள்ளைகளின் உடல் உள வளர்ச்சி
(iii) சிறுவர் துஷ்பிரயோகம்/ உரிமைகள்
(iv) சிறுவர்கள் தொடர்பான சட்டங்கள், நடைமுறை விவகாரங்கள் பற்றிய அறிவு

2. பொது உளச் சார்பு.- உத்தியோகத்தரின் மொழித் திறன், தர்க்கத்திறன், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் மற்றும் கணிதத் திறனை மதிப்பீடு செய்வதற்காக பல்தேர்வு மற்றும் கட்டமைப்பு வினாக்களை உள்ளடக்கிய வினாப் பத்திரமாகும்.

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**:-

| புள்ளி வழங்கும் விடயங்கள் | உச்ச புள்ளிகள் |
|---|---|
| 1. கல்வித் தகைமைகள்<br>பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக விஞ்ஞானம், தத்துவம், மனோதத்துவம், குற்றவியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றையாவது உள்ளடக்கிய<br>பட்டப் பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் - 25 புள்ளிகள்<br>பட்டப் பின் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் - 15 புள்ளிகள் | 25 |
| ஆட்சேர்ப்பு செய்வதற்கான அடிப்படைத் தகைமைக்கான பட்டத்திற்காக<br>முதலாம் தரம் - 20 புள்ளிகள்<br>இரண்டாம் தரம் (உயர்) -15 புள்ளிகள்<br>இரண்டாம் தரம்(கீழ்) -12 புள்ளிகள்<br>சாதாரண சித்தி -10 புள்ளிகள் | 20 |
| 2. பதவி தொடர்பில் களத்தில் பெற்றுள்ள பயிற்சிகள்<br>(i) சமூக சேவைகள் வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டுள்ள இரு வருட டிப்ளோமா பாடநெறிச் சான்றிதழ் - 20 புள்ளிகள்<br>(ii) நன்னடத்தை அதிகாரி பதவி ஒன்றில் தொண்டராக 02 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். (திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தகைமை பெற்ற பரீட்சார்த்திகளுக்கு மட்டும் - 10 புள்ளிகள் | 30 |

| புள்ளி வழங்கும் விடயங்கள் | உச்ச புள்ளிகள் |
|---|---|
| 3. துறை தொடர்பில் பூர்த்தி செய்துள்ள ஏனைய பாடநெறிகள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பில் திறந்த பல்கலைக்கழகத்தில் அல்லது வடமேல் மாகாண முன் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையில் குறைந்தபட்சம் ஒரு வருட டிப்ளோமாவை பூர்த்தி செய்திருத்தல் | 15 |
| 4. ஆங்கில மொழித் தேர்ச்சி<br>க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் விஷேட சித்தி/ உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் அல்லது சமமான ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ஆங்கிலப் பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் -10 புள்ளிகள்<br><br>க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி / அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 06 மாதங்களுக்குக் குறைவில்லாத ஆங்கிலப் பாடநெறி ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் - 07 புள்ளிகள்<br><br>க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 03 மாதங்களுக்குக் குறையாத ஆங்கிலப் பாடநெறி ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் - 05 புள்ளிகள் | 10 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

8. பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவை வடலே் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படுமாறு வதிவிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளார் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதுடன், எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும் (பற்றுச் சீட்டுக்களின் நிழற் படப் பிரதிகளை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும்).

9. **விண்னப்பிக்க வேண்டிய ஒழுங்கு:-**

9.1 இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் அடிப்படையில் A4 அளவுள்ள தாளினைப் பயன்படுத்தி விண்ணப்பப் படிவங்கள் தயார் செய்யப்பட வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2017.04.07 ஆம் திகதியோ அல்லது அத்தினத்திற்கு முன்னரோ "செயலாளர், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " வடமேல் மாகாண நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்கள நன்னடத்தை அதிகாரி பதவிக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை - 2017 " எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9.2 தற்போது அரச /மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தை திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

9.3 மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கும், தெளிவில்லாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

10. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்ததப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமையை உறுதி செய்வதற்கான உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப் முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

11. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல்:-**
பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும் :-

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
2. செல்லுபடியான கடவுச் சீட்டு.

**குறிப்பு** :-பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

12. ஏதேனும் ஒரு பரீட்சார்த்திக்கு தமது அனுமதிப்பத்திரம் பரீட்சைக்கு 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்கப் பெறவில்லையாயின் அது தொடர்பில் உடனடியாக "செயலாளர், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பின்வரும் விடயங்கள் முன்வைக்கப்பட வேண்டும் :-
(அ) பரீட்சையின் பெயர்;
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்;
(இ) முகவரி;
(ஈ) விண்ணப்பத்தை அனுப்பிய முகவரி, பதிவுத் தபால் இலக்கம் மற்றும் திகதி.

13. எவரேனும் ஒரு விண்ணப்பதாரி தகைமையற்றவர் என்பது பதவி வழங்குவதற்கு முன்னர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிய வந்தால் அவரது பரீட்சார்த்தத்தன்மை இரத்துச் செயப்படும். பதவி கிடைத்த பின்னர் தெரிந்து கொண்டு பொய்யான தகவல்களை வழங்கியோ அல்லது உண்மைத் தகவல்கள் வேண்டுமென்றோ மறைக்கப்பட்டு இருந்தமை தெரியவந்தால் தொழிலில் இருந்து நீக்கப்படுவார்கள்.

14. விண்ணப்பம் கோரல் அறிவித்தலுடன் தொடர்பற்ற விடயங்கள் மற்றும் இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

15. இந்தப் பரீட்சையை நடாத்துதல் அல்லது நடாத்தாமல் விடுதல் தொடர்பில் அல்லது நடாத்தாமல் தெரிவு செய்தல்/தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்கள் தெடர்பில் இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும். அவ்வாறே இந்த அறிவித்திலில் குறிப்படப்படாத விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேவெல்ல,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மாகாண அரச அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமேல் மாகாண நன்னடத்தை சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தில் அலுவலக/கள உத்தியோகத்தர்கள் தொகுதி 2 ஊழியர் வகையின் நன்னடத்தை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

பரீட்சை சுட்டெண் [ ]

(அலுவலக உபயோகத்திற்காக)

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்) :----.
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்) :----.
1.4 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
1.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----. [ | | | | | | | | | | | ]

02. 2.1 நிரந்தர முகவரி :-----.
2.2 அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி:-----.
2.3 தொலைபேசி இலக்கம் : தனிப்பட்ட:-----. அலுவலக :-----.

03. பால் (உரிய பெட்டியிள் X அடையாளம் இடுக)

பெண் [ ] ஆண் [ ]

04. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம்
சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]

05. பிறந்த திகதி:-----. ஆண்டு :-----, மாதம்:-----, திகதி :-----.
06. விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினமான 2017.04.07 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள்:-----. மாதங்கள்:-----. நாட்கள் :-----.
07. 2017.04.07 ஆந் திகதிக்கு வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவுக் காலம் :-
வருடங்கள்:-----. மாதங்கள்:-----. நாட்கள் :-----.
08. கல்வித் தகைமைகள் (விண்ணப்பம் கோரல் அறிவித்தலின் 03 (அ) வில் குறிப்பிட்டுள்ள படி)
க.பொ.த (சா.த.) பரீட்சைக்குத் தோற்றிய வருடம், பரீட்சை சுட்டெண் :
ஆண்டு :-----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | பெற்றுக் கொண்ட பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றிய வருடம், பரீட்சை சுட்டெண்.
ஆண்டு:-----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | பெற்றுக் கொண்ட பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |

பெற்றுக் கொண்டுள்ள பட்டம் பற்றிய விபரம்:-----.
பல்கலைக் கழகம்:-----.
பாடங்கள் :-----.
பட்டம் செல்லுபடியாகும் திகதி:-----.

09. பரீட்சைக் கட்டண பற்றுச் சீட்டு இலக்கம் :-----.
திகதி:-----.
பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்ட பிரதேச செயலாளர் அலுவலகம்:-----.

பற்றுச் சீட்டினை இவ்விடத்தில் கழராதவாறு ஒட்டவும்.

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை:-

....................... ஆகிய என்னால் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மை என்றும், பரீட்சைக்கட்டணம் செலுத்திய இலக்கம்................................................ ஆம் திகதி கொண்ட பற்றுச் சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பரீட்சை விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இந்தப் பரீட்சையின் விதிமுறைகளின் படி தகைமையற்றவர் என அறியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ, பின்னரோ எனது விண்ணப்பத் தகைமை இரத்துச் செய்யப்படும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல்

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி .......................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ....................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.

கையொப்பம் :----.

பதவி, உத்தியோகபூர்வ முத்திரை :----.

(இந்த உறுதிப்படுத்தல் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு அலுவலர், அல்லது 2,40,360 ரூபாவுக்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

அரசாங்க சேவையில் தற்போது சேவையாற்றும் விண்ணப்பதாரிகளது திணைக்களத் தலைவரின் விதப்புரை

(தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

திரு./திருமதி/செல்வி ............................................................... அவர்கள் தற்போது ...................................... அமைச்சில்/திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .............................. நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ளார் என்பதையும், அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்பட்டவர் அல்ல என்றும், அனுதாப மாற்றுத் தெரிவின் அடிப்படையிலோ அல்லது செயற்றிறன் இன்மை காரணமாக ஓய்வில் அனுப்பப்பட்டவர்/ அனுப்பப்படாதவர் என்பதையும் பதவியை விட்டுச் சென்றவராக கருதப்படுவர்/கருதப்படாதவர் என்பதையும் உறுதி செய்வதோடு, இந்தப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் அவர் தற்போது சேவையில் உள்ள பதவியில் இருந்து விடுவிப்பு வழங்க முடியும்/ முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-----,
திணைக்களத்தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :----.

*2-190*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

**12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

**13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

**14. 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2017**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 03.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2017 |
| | | வியாழன் | 09.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2017 |
| | | வெள்ளி | 17.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2017 |
| | | வியாழன் | 23.02.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.02.2017 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2017 |
| | | வெள்ளி | 10.03.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.02.2017 |
| | | வெள்ளி | 17.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2017 |
| | | வெள்ளி | 24.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2017 |
| | | வெள்ளி | 31.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2017 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 07.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2017 |
| | | புதன் | 12.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.03.2017 |
| | | வெள்ளி | 21.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.04.2017 |
| | | வெள்ளி | 28.04.2017 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2017 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.